Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 48

## ஐங்குறுநூறு - ஓர் முன்பழந்தமிழ் இலக்கியம்

*தி. மோகன்ராஜ்* [1]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,, தஞ்சாவூர்,
*மின்னஞ்சல்: mohr_d12@yahoo.co.in/99947 81727*
*முனைவர் க. திலகவதி* [2]
[2]இணைப் பேராசிரியர் , மற்றும் நெறியாளர்
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலை, தஞ்சாவூர்

## மொழியமைப்பு மாற்றங்களும் இலக்கண இலக்கியப் பதிவுகளும்

மொழியானது காலந்தோறும் மாறிவரும் தன்மையை உடையது. இந்த மாற்றங்களை அவ்வக் காலங்களில் எழும் இலக்கணங்கள் முறையாகப் பதிவுசெய்கின்றன. தொல்காப்பியம் விளக்கும் தமிழ்மொழியின் அமைப்பு நன்னூல் விளக்கும் தமிழ்மொழியின் அமைப்பிலிருந்து பல வகைகளில் மாறுபட்டுள்ளது. உடம்படுமெய்கள் யாவை என்பதைத் தொல்காப்பியம் விளக்கவில்லை(தொல்.எழுத்து.141). ஆனால், நன்னூல் உடம்படுமெய்கள் யாவை என்பதை விளக்கி அவற்றின் வருகை இடத்தையும் குறிப்பிடுகிறது(நன்.162). தன்மை ஒருமைப் பெயராகத் தொல்காப்பியம் 'யான்' என்பதைக் குறிப்பிடுகிறது(தொல்.சொல்.159); ஆனால், நன்னூல் 'யான்' என்பதுடன் 'நான்' என்பதையும் குறித்துள்ளது(நன்.285). தன்மை இடத்தைத் தொல்காப்பியம் உயர்திணைக்கு உரியதாகக் குறிப்பிட்டுள்ளது(தொல்.சொல்.159); ஆனால்,

நன்னூல் அதனை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானதாகக் கருதுகிறது(நன்.285). வினையெச்ச வாய்பாடுகளில் செயற்கு என்னும் வினையெச்ச வாய்பாடு தொல்காப்பியத்தில் இடம்பெறுகின்றது(தொல்.சொல்.223). ஆனால், நன்னூலில் அது குறிப்பிடப்படவில்லை. மாறாக, வான், பான், பாக்கு போன்ற வினையெச்ச விகுதிகள் நன்னூலில் சுட்டப்பட்டுள்ளன(நன்.343). இவ்வாறு, மொழியில் புணர்ச்சி முதல் பெயர், வினைகளில் ஏற்பட்ட மாற்றங்களை அவ்வக்கால இலக்கணங்கள் பதிவுசெய்துள்ளன.

இலக்கணங்களின் வழியாக மட்டுமன்றி இலக்கியங்களின் வழியாகவும் மொழியமைப்பில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. பல்வேறு காலகட்டத்தில் எழுந்த இலக்கியங்களின் மொழியமைப்பை ஒருங்கு வைத்து நோக்கும்போது இவ்வுண்மை புலப்படும். சங்ககாலத்தின் மொழியமைப்புச் சங்கம் மருவிய காலத்துடன் ஒப்பிடப்படும்போது பல வகைகளில் மாற்றங்களை அடைந்திருக்கும். இலக்கணங்கள் அவற்றைப் பற்றிக் குறிப்பிடாத போதிலும் இலக்கியங்களில் அவை காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் காணலாகும் தழீஇ(குறுந்.215:5), அறீஇ(புறம்.398:16) போன்ற அளபெடை வாய்பாட்டு வினையெச்சங்கள் பிற்கால இலக்கியங்களில் காணப்படுவதில்லை. அதேபோன்று, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இடம்பெறும் அந்த(மணி.17:4), இந்த(சிலம்பு.15:107) போன்ற சுட்டு அடைகள் சங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லை. திருக்குறளில் இடம்பெற்றுள்ள செய்தற்பொருட்டு(குறள்.81), தினற்பொருட்டு(குறள்.256) எனவரும் தொடரமைப்பும் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. இச்சான்றுகளின்வழி, இலக்கியங்கள் அவற்றின் பாடுபொருள், யாப்பு போன்றவற்றால் பாகுபடுத்தப்படுவது போன்று அவற்றின் மொழியமைப்பாலும் பாகுபடுத்தக் கூடியன என்பது புலனாகிறது. எல்.வி.இராமசாமி ஐயர், வையாபுரிப்பிள்ளை, ச.அகத்தியலிங்கம் போன்றோர் இவ்வாறு தமிழ் இலக்கியங்களை அவற்றின் மொழி அமைப்பைக் கொண்டு மூன்று காலங்களாகப் பாகுபடுத்தியுள்ளனர்.

## மொழியமைப்பும் தமிழ் இலக்கிய வகைப்பாடும்

வரலாற்று நிலையில் தமிழ்மொழியின் வளர்ச்சி மூன்று காலங்களாகப் பகுக்கப்பட்டு விளக்கப்படுகிறது. அது பண்டைக்காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என வகைப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு காலத்திற்குமான மொழியமைப்புப் பிற காலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்று விளங்குகிறது. எனவேதான், இவை தனிதனிக் காலங்களாகப் பாகுபடுத்தப்படுகின்றன. இந்த வகைப்பாடும் அவை அடங்கும் காலப்பகுப்பும் ச.அகத்தியலிங்கத்தின் விளக்கத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் படம்-1 மற்றும் படம்-4'இல் குறிப்பிடப்பட்டுள்ளன(ச.அகத்தியலிங்கம், 1983:29).

தமிழ்

பண்டைத்தமிழ் — கி.மு.3'ஆம் நூற்.- கி.பி.6'ஆம் நூற்.

இடைக்காலத் தமிழ் — கி.பி.6'ஆம் நூற்.- கி.பி.17'ஆம் நூற்.

தற்காலத் — கி.பி.17'ஆம் நூற்.- தற்காலம்

**படம்-1 : கால வகைப்பாடு**

பண்டைத்தமிழ்க் காலமும் சில மொழிக்கூறுகளின் அடிப்படையில் தொல் பழந்தமிழ் மற்றும் பழந்தமிழ் என்று இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்துடன், பழந்தமிழ்க் காலமும் முன்பழந்தமிழ்க் காலம், பின்பழந்தமிழ்க் காலம் என்று இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தொல் பழந்தமிழ்க் காலத்தில் குகைக் கல்வெட்டுக்களும் தொல்காப்பியமும் அடங்கும். முன்பழந்தமிழ்க் காலத்தில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் இடம்பெறுகின்றன. பின்பழந்தமிழ்க் காலத்தில் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் இடம்பெறுகின்றன. இதனைக் கீழ்க்காணும் படம்-2'இன்வழி விளக்கலாம். மொழிக்கூறுகளில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக முன்பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து பின்பழந்தமிழ் இலக்கியங்கள் பிரித்தறியப்படுகின்றன.




படம் 2 : பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வகைப்பாடு

## முன்பழந்தமிழ் இலக்கியக் கூறுகளும் ஐங்குறுநூறும்

மேற்காட்டிய படத்தின்வழி ஐங்குறுநூறு முன்பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம். இந்நிலை ஐங்குறுநூற்றில் காணலாகும் மொழியமைப்பு முன்பழந்தமிழ் இலக்கியங்களின் மொழியமைப்புடன் பொருந்திவருகிறது என்பதை உணர்த்துகிறது. அவ்வாறு, முன்பழந்தமிழ் இலக்கியங்களின் மொழிக் கூறுகள் ஐங்குறுநூற்றில் பயின்றுவரும் பாங்கு இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

## கள் விகுதிப் பயன்பாடு

பன்மைப் பொருளை உணர்த்தும் கள் விகுதி, அஃறிணைப் பெயர்களுடன் மட்டுமே வரும் என்றும் அதுவும் கட்டாயமாக இடம்பெறவேண்டியதில்லை என்றும் தொல்காப்பியம் சுட்டியுள்ளது(தொல்.சொல்.166). அதனடிப்படையில், முன்பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் கள் விகுதி, அஃறிணைச் சொற்களுடன் மட்டுமே இணைந்து வந்துள்ளது. ஐங்குறுநூற்றிலும் மயில்கள் என்னும் அஃறிணைச் சொல் இரண்டிடங்களில் பயின்று வந்துள்ளது. ஐங்குறுநூற்று உயர்திணைப் பெயர்களில் கள் விகுதி இடம்பெறவில்லை. உயர்திணைச் சொற்களுடன் கள் விகுதி இடம்பெறுவது பின்பழந்தமிழ்க் கூறாகும்(ச.அகத்தியலிங்கம்,1984:115). இது ஐங்குறுநூறு முன்பழந்தமிழ் இலக்கியமாகக் கருதப்படுவதற்குச் சான்றாக அமைகிறது.

*மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்* (ஐங்.291:1)
*மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிர* (ஐங்.292:1)

## இசின் வாய்பாடு

இசின் என்பது ஓர் அசைச்சொல் என்று தொல்காப்பியம் சுட்டியுள்ளது(தொல்.சொல்.269,270). இதுவும் ஒரு முன்பழந்தமிழ் மொழிக் கூறாகும். இது பின்பழந்தமிழ் இலக்கியமான பரிபாடல் போன்றவற்றில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது(ச.அகத்தியலிங்கம்,1984:117). ஆனால், இசின் வாய்பாட்டு வினைவடிவங்கள் ஐங்குறுநூற்றில் மொத்தம் 11 இடங்களில் பயின்றுவந்துள்ளது(M.Elayaperumal,1975:18).

*கேட்டிசின் வாழியோ மகிழ்ந* (ஐங்.59:1)
*வந்திசின் வாழியோ மடந்தை* (ஐங்.175:3)

மேற்காட்டிய சான்றுகளில் கேட்டிசின், வந்திசின் ஆகிய இசின் வாய்பாட்டு வினைகள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.

## ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

சங்க இலக்கியங்களில் செய்யாத வாய்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சம் பின்பழந்தமிழ் இலக்கியக் கூறாகக் கொள்ளப்படுகிறது. புறநானூற்றில் இரண்டிடங்களில் காணப்பட்டாலும் அது முன்பழந்தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பயின்று வரவில்லை. ஆனால், பின்பழந்தமிழ் இலக்கியங்களில் இது பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பர் அறிஞர்கள் (ச.அகத்தியலிங்கம்,1984:117). முன்பழந்தமிழ் இலக்கியங்களில் செய்யா வாய்பாட்டு எதிர்மறை வாய்பாட்டுப் பெயரெச்சமே பெரும்பான்மையாகும். ஐங்குறுநூற்றில் ஓரிடத்தில் கூடச் செய்யாத வாய்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சம் இடம்பெறவில்லை. எதிர்மறை உணர்த்தும் எல்லாப் பெயரெச்சங்களும் செய்யா வாய்பாட்டிலேயே வந்துள்ளன.

*தன்னொடு நிகரா என்னொடு நிகரி* (ஐங்.67:2)
*நாடன் உற்றோர் மறவா நோய்தந்து* (ஐங்.278:3-4)

போன்ற இடங்களில் நிகரா, மறவா என்னும் செய்யா வாய்பாடு எதிர்மறைப் பெயரெச்சமே இடம்பெற்றுள்ளது.

## முடிவுரை

மொழியமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் அவ்வக்கால இலக்கணங்களில் பதிவுசெய்யப்படுவது போன்றே அவ்வக் கால இலக்கியங்களிலும் பதிவாகின்றன. அதன் அடிப்படையில் தமிழ் மொழியினைப் பண்டைக்காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், பிற்காலத் தமிழ் என மூன்று வகைகளாக அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியங்களில் ஒன்றான ஐங்குறுநூறு ஒரு முன்பழந்தமிழ் இலக்கியமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான சில சான்றுகள், இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ஐங்.-ஐங்குறுநூறு; குறள்.-திருக்குறள்; குறுந்.-குறுந்தொகை; சிலம்பு.-சிலப்பதிகாரம்; தொல்.எழுத்து.-தொல்காப்பியம் எழுத்ததிகாரம்; தொல்.சொல்.-தொல்காப்பியம் சொல்லதிகாரம்; நன்.-நன்னூல்; புறம்.-புறநானூறு; மணி.-மணிமேகலை

## துணைநூல்கள்


1. அகத்தியலிங்கம் ச., 1984, சங்கத்தமிழ் I, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், சென்னை.
2. அடிகளாசிரியர்(பதி.), 1988, தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. இளவரசு சோம., 1990, நன்னூல் விருத்தியுரை, அண்ணாமலை நகர்.
4. ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், 2012, டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், சென்னை.
5. சுந்தரமூர்த்தி கு.(பதி.), 1979, தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம், அண்ணாமலை நகர்.